# பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# வெற்றிடம்

## பணிப்பாளர் நாயகம் *(01)*

## *(*இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் *– SLIDA)*

*இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) மேற்படிப் பதவிக்கான தகைமையுடைய உத்தியோத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**<u>தகைமைகள் மற்றும் தேர்ச்சிகள்</u>**

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தான பட்டப்பின் பட்டத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் *20* வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து *(05)* வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்துடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.**

**அல்லது,**

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு ஏற்புடையதாக பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.**

**அல்லது**

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிறைவேற்று மட்டத்துடைய உத்தியோகத்தராக இருபது *(20)* வருட அனுபவம் மற்றும் அதில் மூன்று *(03)* வருடங்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருத்தல்.**

**அல்லது**

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்துடன் அரசின் அல்லது நியதிச் சட்ட சபையில் அல்லது நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் *20* வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து *(05)* வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் *(HM 2-1)* அனுபவத்தைப் பெற்றிருத்தல்.**

- **வயது *35* க்குக் குறையாமலும் *55* வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.**

- **சகல தரவுகளையும் உள்ளடக்கிய சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பப்படிவத்தை *2023* பெப்ரவரி மாதம் *17* ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு *07* என்ற** *முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.*

**நீல் பண்டார ஹபுகின்ன**
*செயலாளர்*
*பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.*